www.PapaCambridge.com

UNIVERSITY OF CAMBRIDGE INTERNATIONAL EXAMINATIONS
General Certificate of Education Advanced Level

**TAMIL** **9689/04**

Paper 4 Texts **October/November 2012**

**2 hours 30 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen.
Do not use staples, paper clips, highlighters, glue or correction fluid.

Answer any **three** questions, each on a different text. You must choose **one** from Section 1, **one** from Section 2 and **one other**.
Write your answers in **Tamil** on the separate answer paper provided.
Dictionaries are **not** permitted.
You may **not** take set texts into the examination.
You should write between 500 and 600 words for each answer.
You are advised to divide your time equally between your answers.

The number of marks is given in brackets [ ] at the end of each question or part question.
At the end of the examination, fasten all your work securely together.

**முதலில் கீழே உள்ளதைப் படிக்கவும்**

விடைகள் எழுதுவதற்காக தாள்கள் கொடுக்கப்பட்டிருந்தால் அதிலுள்ள கட்டளைகளைப் பின்பற்றவும்.
நீங்கள் கொடுக்கும் எல்லா விடைத் தாள்களிலும் உங்கள் பெயர், உங்கள் எண், தேர்வு நிலைய எண் ஆகியவற்றை எழுதவும்.
கருப்பு அல்லது கரு நீல பேனா மையினால் விடைகளை எழுதவும். பசை, பிழை திருத்தும் திரவம், ஸ்டேப்பிள் பின்கள், ஹைலைட்டர்கள், பேப்பர் க்ளிப்புகள் ஆகியவற்றைப் பயன்படுத்தாதீர்கள்.

ஏதாவது **மூன்று** கேள்விகளுக்கு, வேறு வேறு பாடப் பகுதிகளிலிருந்து கேள்விகள் எடுத்து விடைகளை எழுதவும். பகுதி ஒன்றிலிருந்தும் பகுதி இரண்டிலிருந்தும் ஒவ்வொரு கேள்விக்கு கட்டாயமாக விடை தரவேண்டும். மற்றொரு கேள்வியை எந்தப் பகுதியிலிருந்தும் எடுக்கலாம்.
உங்களுடைய விடைகளை தனியாகக் கொடுக்கப்பட்டுள்ள விடைத் தாளில் **தமிழில்** எழுதவும்.
அகராதிகளைத் தேர்வு எழுதும் இடத்துக்குக் **கொண்டுபோகக்கூடாது**.
பாடப் புத்தகங்களைத் தேர்வு எழுதும் இடத்துக்குக் கொண்டுபோகக்கூடாது.
ஒவ்வொரு கேள்விக்கும் 500 முதல் 600 சொற்களில் விடை எழுதவேண்டும்.
தேர்வு எழுதவிருக்கும் நேரத்தை எல்லா விடைகளையும் எழுத சமமாகப் பங்கிட்டுக் கொள்வது நல்லது.

ஒவ்வொரு கேள்விக்கும் உரிய மதிப்பெண்கள் அடைப்புக் குறிக்குள் [ ] தரப்பட்டுள்ளது.
தேர்வு எழுதி முடித்தவுடன் விடைத் தாள்கள் எல்லாவற்றையும் சேர்த்துக் கட்டிக்கொடுக்கவும்.

This document consists of **4** printed pages.

DC (SJF/LEO) 52664/1
© UCLES 2012

UNIVERSITY of CAMBRIDGE International Examinations

**[Turn over**

www.PapaCambridge.com

**பகுதி – 1**

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுள்ளும் இரு பிரிவுகள் உள்ளன.

**1** ஏதாவது ஒரு வினாவிற்கு (**(a)** அல்லது **(b)**) விடை தரவும்

**(a)** நற்றிணை

உள்ளுதொறும் நகுவேன்-தோழி!-வள் உகிர்
மாரிக் கொக்கின் கூரல் அன்ன
குண்டு நீர் ஆம்பல் தண் துறை ஊரன்
தேம் கமழ் ஐம்பால் பற்றி, என் வயின்
வான் கோல் எல் வளை வெளவிய பூசல்
சினவிய முகத்து,'சினவாது சென்று,நின்
மனையோட்கு உரைப்பல்' என்றலின்,முனை ஊர்ப்
பல் ஆ நெடு நிரை வில்லின் ஒய்யும்
தேர் வண் மலையன் முந்தை,பேர் இசைப்
புலம் புரி வயிரியர் நலம் புரி முழவின்
மண் ஆர் கண்ணின் அதிரும்,
நன்னாராளன் நடுங்கு அஞர் நிலையே.
- பரணர்

**(i)** ஒவ்வொரு பாடலிலும் ஒரு வரலாற்றுச் செய்தியைக் கூறுவது பரணர் பாடலின் சிறப்பு. இந்தப் பாடலில் அவர் கூறும் செய்தியும் அதன் வழியாக அவர் தெரிவிப்பதும் என்ன?

**(ii)** வள் உகிர் மாரிக் கொக்கு, புலம் புரி வயிரியர் ஆகிய சொற்றொடர்களின் பொருளை விளக்கி எழுதவும். [25]

**(b)** அகநானூறு

**(i)** இளவேட்டனார் பாடிய பாடலில் தோழியின் வாயிலாக என்ன கூறுகிறார்?

**(ii)** இந்தப் பாடல் குறிஞ்சித்துறையில் எப்படிப் பொருந்தும்? [25]

www.PapaCambridge.com

**2** ஏதாவது ஒரு வினாவிற்கு (**(a)** அல்லது **(b)**) விடை தரவும்

**(a)** திருக்குறள்

**சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்**
**ஏமப் புணையைச் சுடும்**

**சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு**
**நிலத்தறைந்தான் கைபிழையா தற்று**

**(i)** வெகுளாமை என்னும் அதிகாரத்தில் வரும் இக் குறள்களிலும் ஏனைய குறள்களிலும் வள்ளுவர் என்ன கூறுகிறார்?

**(ii)** சேர்ந்தாரைக்கொல்லி, நிலத்தறைந்தான் கை ஆகிய உவமைகளை விளக்கி அவற்றின் வழியாக வள்ளுவர் கூறும் கருத்துக்களை விளக்குக. [25]

**(b)** வினை செயல் வகை என்ற அதிகாரத்தில் வள்ளுவர் வலியுறுத்தும் கருத்துக்களைத் தொகுத்து வரைக. [25]

**3** ஏதாவது ஒரு வினாவிற்கு (**(a)** அல்லது **(b)**) விடை தரவும்

**(a)** தேவாரம் - அப்பர்

சடையுடையான் சங்கக் குழையோர் காதன்
சாம்பலும் பாம்பும் அணிந்த மேனி
விடையுடையான் வேங்கை அதள் மேலாடை
வெள்ளி போற் புள்ளியுழை மான் தோல் சார்ந்த
உடையுடையான் நம்மை யுடையான் கண்டீர்
உம்மோடு மற்று முளராய் நின்ற
படையுடையான் பணிகேட்கும் பணியோ மல்லோம்
பாசமற வீசும் படியோம் நாமே

**(i)** இந்தப் பாடலில் சிவபெருமானை அப்பர் எப்படி வருணிக்கிறார்?

**(ii)** இந்தப் பாடலைக் கொண்ட மறுமாற்றத்தாண்டகத்தை அவர் எந்த சூழ்நிலையில் இயற்றினார் என்று விளக்கி எழுதுக. [25]

**(b)** அப்பர் பாடிய மறுமாற்றத்தாண்டகப் பாடல்களின் சொல் நயம், பொருள் நயத்தைத் தொகுத்து எழுதுக. [25]

www.PapaCambridge.com

## பகுதி – 2

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுள்ளும் இரு பிரிவுகள் உள்ளன.

ஏதாவது ஒன்றிற்கு மட்டும் (**(a)** அல்லது **(b)**) விடை தருக.

**4** இக்காலக் கவிதைகள்

**(a)** பாரதியார்
திருப்பள்ளி எழுச்சி என்னும் பாடலில் பாரத அன்னையை பாரதியார் எழுப்பும் விதத்தை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக. [25]

**(b)** பாரதிதாசன்
மயில் என்னும் கவிதையின் பொருட்செறிவு, சொல்நயங்களை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கி ஒரு கட்டுரை எழுதுக. [25]

ஏதாவது ஒன்றிற்கு மட்டும் (**(a)** அல்லது **(b)**) விடை தருக.

**5** நாடகம்

**(a)** மருது சகோதரர்கள் பாத்திரப்படைப்பில் வீரச்சுவை மிளிர்கிறதா? உங்கள் மதிப்பீட்டை எடுத்துக்காட்டுகளோடு விளக்குங்கள். [25]

**(b)** மருது சகோதரர்களின் எதிரிகளாக வரும் கதாபாத்திரங்களை நாடக ஆசிரியர் எப்படிப் படைத்துள்ளார்? [25]

ஏதாவது ஒன்றிற்கு மட்டும் (**(a)** அல்லது **(b)**) விடை தருக.

**6** நவீன தமிழ்ச் சிறுகதைகள்

**(a)** சுந்தர ராமசாமியின் எழுத்துத் திறமையைக் காட்ட பக்கத்தில் வந்த அப்பா கதையில் என்ன எடுத்துக்காட்டுகள் உள்ளன? கட்டுரை வாயிலாக விளக்கவும். [25]

**(b)** மைலாப்பூர் கதையில் ஆசிரியர் கூறவரும் கருத்து என்ன? இதில் அவர் எந்த அளவுக்கு வெற்றிபெற்றிருக்கிறார்? [25]

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

University of Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of